பிப்ரவரி 1952

ஹோமியோபதி

சுகத்திற்கும் வாழ்க்கைக்கும்

இந்த இதழில்:

“நவீன கருப்பத்தடை முறைகள்”

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்டின்
மாத வெளியீடு

"ஹோமியோபதி"

1. "ஹோமியோபதி" பிரதி மாதமும் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளி வருகின்றது. ஆங்கிலப் பிரதி 5உ-களிலும், தமிழ் 20உ-களிலும் வெளிவரும்.

2. ஆங்கில "ஹோமியோபதி"யிலுள்ள விஷயங்களே தமிழிலும் மொழிபெயர்ப்பாக வரும் என்று சொல்லுவதற்கில்லை.

3. நமது "ஹோமியோபதி"யில் பிரசுரிக்க ஹோமியோபதி வைத்திய சம்பந்தமான கட்டுரைகள் அங்கீகரிக்கப்படும். உண்மையிலேயே உபயோக கரமாகவுள்ள கட்டுரைகளே பிரசுரிக்கப்படும்.

4. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்புவது சாத்திய மில்லை. எனினும் திருப்பி அனுப்பத்தான் வேண்டுமென்று கேட்பவர்களுக்கு கூடுமான வரையில் திருப்பி அனுப்ப பிரயத்தனப்படுவோம்.

5. ஹோமியோபதியில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகளின் "காபிரைட்" "ஹோமியோபதி"யின் நிர்வாகிகளுக்கே உரியதாகும்.

6. "ஹோமியோபதி"யில் வெளியாகும் கட்டுரைகளில் உள்ள விஷயங்களின் அபிப்பிராயங்கள் கட்டுரையாளர்களுடையவையே.

7. பிரசுரிப்பதற்காக அனுப்பப்படும் கட்டுரைகள் சொந்த அனுபவங் கள், அல்லது ஆராய்ச்சிகளாக இருக்கவேண்டும். வேறு இடங்களி லிருந்து காப்பிகளாக இருக்கக்கூடாது.

8. கட்டுரைகள் மிகவும் தெளிவாகக் காகிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியினால் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

9. மிகவும் விசேஷமாக உள்ள கட்டுரைகளுக்கு நிர்வாகிகளின் உசிதம் போல் சன்மானம் அளிக்கப்படலாம்.

10. சந்தா விபரங்கள் வருமாறு:

	இந்தியா சிலோன்	இதர வெளிநாடுகள்
ஆங்கிலம், தமிழ், இரண்டுக்கும் வருட சந்தா	ரூ. 5-0-0	ரூ. 7-8-0
ஆங்கிலம் அல்லது தமிழ் மாத்திரம் வருட சந்தா	ரூ. 3-0-0	ரூ. 4-0-0

எல்லா விபரங்களுக்கும் கீழ்கண்டவர்களுக்கு எழுதவும்:

நிர்வாக ஆசிரியர்
"ஹோமியோபதி"
ஹோமியோ ஹவுஸ்
கும்பகோணம்

ஹோமியோபதி

நிர்வாக ஆசிரியர் : டாக்டர் V. R. மூர்த்தி

பிப்ரவரி 1952

பொதுஜனமும் ஹோமியோபதியும் ... 2
நவீன கருப்பத்தடை முறைகள் ... 5
ஹோமியோபதியின் வேதாந்தம் ... 13
ஹோமியோபதியும், ஹோமியோபதியர்களும் ... 16
மெட்டீரியா மெடிகா — குறிப்புகள் ... 18
இதர சஞ்சிகைகளிலிருந்து ... 19
மதுரை மஹாநாட்டு அறிக்கை ... 22

டாக்டர் மூர்த்தியின்

H. P. P. ஔஷதங்கள்

1 முதல் 24 ஔஷதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முக்கியமான வியாதிக்கு ஏற்றது.

இது சம்பந்தமான புத்தகத்திற்கு எழுதவும்.

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்,

ஹோமியோ ஹவுஸ், கும்பகோணம்.

ஹோமியோபதி

VOL. 6 பிப்ரவரி 1952 NO. 2

பொது ஜனமும் ஹோமியோபதியும்

நமது சுதந்திர பாரத நாட்டிலே மஹத்தான முதலாவது பொதுத் தேர்தல் அனேகமாக முடிவடைந்து விட்டது. நமது சென்னை இராஜ்ஜியத்திலே தேர்தல் முடிவுகள் அனைத்தும் தெரிந்துவிட்டதுடன், ஏற்பட்ட முடிவுகளின் பலனாக எந்தக் கக்ஷிதான் பதவி ஏற்கும் என்கிற நிலைமை தெரியாமலேயே இருந்து வருகின்றது. முக்கியமாக நமது சென்னை இராஜ்ஜியத்தில் இந்த சூழ் நிலைக்குக் காரணம் பம்பாய், மத்திய மாகாணம் போன்ற இதர இராஜ்ஜியங்களைப்போலில்லாமல் காங்கிரஸ் போதிய அளவு வெற்றி பெருததே என்று விஷயம் அறிந்தவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் சென்ற பலகாலமாக அகில இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருந்த சென்னைமாகாணம் இன்று இந்த நிலைமைக்கு வரக் காரணம் என்ன என்பதை சிந்தித்து பார்ப்போமானால் சென்ற ஐந்து வருடங்களில் காங்கிரசுக்கும் பொது ஜனங்களுக்கும் தொடர்பு இல்லாமல் போனதுதான் என்று திட்டமாகத் தெரியவரும்.

சமீபகாலங்களில், இந்தப் "பொதுஜனம்" சற்று உஷாராகவே ஆகிவிட்டார் என்பது நன்கு ஊன்றி கவனித்தால்தான் தெரியும். இது அகில உலகத்திற்கே பொருந்தும். அரசாங்கம் ஒரு புது வரியைப்போடு வதற்கும் சரி, அவ்வரியை எதிர்க்கும் ஒரு தலைவரும் சரி, தங்கள் சார்பில் மிஸ்டர் "பொதுஜனம்" இருப்பதாகவே கூறிக்கொள்ளுவது சகஜம், "பொதுஜனம்" தன் சொரூபத்தைக் காட்டும் வரையில் "பொதுஜனம்" தங்கள் சார்பிலேதான் இருப்பதாக நினைத்துக்கொண்டு காரியங்கள் நடந்துவந்தன. ஆனால் "அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்" என்னும் பழையமொழிப்படி, இந்த பொதுஜனம் தெய்வத்தைப்

போலவே **நின்று** தன் வாக்கை உபயோகித்து விட்டது நம் இராஜ்ஜியத்திலே!

சமீபத்தில் நடந்த •தேர்தலிலே பொதுஜனம் நமது சென்னை இராஜ்ஜியத்திலே, நமது மகத்தான காங்கிரசைப் போதுமானபடி ஆதரிக்க வில்லை என்பது பலரின் கருத்து. ஆனால் "சென்ற ஐந்து வருடகாலமாக, காங்கிரசும் அதன் நிர்வாகஸ்தர்களும், காங்கிரஸ் அரசாங்கமும், "பொதுஜனம்" இருப்பதாகவே கருதவில்லையே" என்பது பொதுஜனத்தின் பிரதிவாதம். "பொதுஜனத்தின்" நன்மைக்குத்தானே இவ்வளவு காரியங் களும் செய்தோம் இதை இந்த முட்டாள் "பொதுஜனம்" அறிந்துகொள்ள வில்லையே" என்று பிரலாபிப்பதில் பலன் இல்லை. ஏனெனில் அவ்வாருயின் அவ்வப்போது பொதுஜனங்களிடத்தில் "இன்னது செய்கிறோம் இதனால் இந்தக்கஷ்டம் தற்காலிகமாக உண்டு, பின்னல் இந்தப்பலன் உண்டு" என்கிற விஷயத்தை ஏன் எடுத்துச் சொல்லி ஸ்ரீமான் பொதுஜனம் உங்கள் கக்ஷியில் இருக்கும்படி செய்யக்கூடாது என்ற கேள்வி எழுகின்றது. இதுவோ விளம்பரக் காலம். ஒரு கையால் செய்த உபகாரம் மறுகைக்குத் தெரியாமல் செய்வதுமேல் என்கிற துவாபர யுகக் கொள்கை தற்சமயம் பிரயோஜனப்படாது. கடுகளவு செய்தாலும் அதை மலையளவு பெருக்கி விளம்பரம் செய்து பிரமிக்கவைக்க வேண்டியகாலம் இது என்பதையும், பொதுஜனம் முட்டாள் அல்ல என்பதையும் தெரிந்து கொள்ளாமல் போனல் எந்த விஷயத்திலும் படுதோல்வியே ஏற்படும் என்பது நிதரிசனமான உண்மை.

சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தல் ஹோமியோபதியர்களாகிய நமக்கும் ஒருபடிப்பினையே ஆகும். ஹோமியோபதியர்களாகிய நாமும், "பொதுஜனத்தை"த் திருப்தி செய்வித்து, அவர்களின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்து வைத்துக்கொள்ள வேண்டியதும் குறைந்தபக்ஷம் பொது ஜனத்தின் அதிருப்திக்காவது ஆளாகாமல் இருக்கவேண்டியதும் அவசியத்திலும் அவசியமாகும். தவிர இந்த விளம்பர யுகத்திலே, நாம் செய்வதை நன்கு எடுத்துச் சொல்ல நல்ல வசதிகளும் தேவை. இந்த முயற்சியிலேதான் நமது "ஹோமியோபதி" தன் தொண்டைத் தீவிரமாகச் செய்ய தற்சமயம் உலாவிவருகின்றது. எவ்வளவுக் கெவ்வளவு நமது பத்திரிகை பலம்பெற்று உலாவ ஆரம்பிக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நமது பிரச்சாரம் பலம் பெறும் என்பதைத் தமிழ் நாட்டு ஹோமியோபதியர் அனைவரும் அறிய வேண்டும். ஆகவே தமிழ்நாட்டு ஹோமியோபதியர்களின் பத்திரிகையாகிய "ஹோமியோபதியை" ஒவ்வொரு ஹோமியோபதியரும் ஆதரிப்பதுடன், ஒவ்வொருவரும் குறைந்தது மூன்று புதிய சந்தாதாரர்

களையாவது சேர்த்து இதைப் பலம் பெறச்செய்வது, ஹோமியோபதியர்கள் தங்களுக்கே செய்துகொள்ளும் நன்மையாகும்.

ஹோமியோபதி வைத்தியமுறை நம் நாட்டிற்குச் செய்துவரும் பணியைப் பிரச்சாரம் செய்யும் பணியிலே அவ்வப்போது ஆங்காங்கு கூட்டப்படும் மஹாநாடுகளும் உபயோகமானவைகளே. நாளது மார்ச்சு மீ 9உ மதுரையிலே ஒரு மஹாநாடு கூட இருப்பதாக அறிகிறோம். டாக்டர் M. S. ஸ்ரீனிவாசனைத் தலைவராகவும், டாக்டர் பாக்கியநாதனை காரியதரிசியாகவும் மற்றும்பல அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு வரவேற்புக் கமிட்டி தீவிரமாக வேலையைத்துவக்கிவிட்டது. நம் நாட்டு ஹோமியோபதியர்கள் இம்மஹாநாட்டிற்குத் திரளாக வந்து அதில் கலந்துகொண்டு வெற்றி முரசு கொட்டுவார்கள் எனவும் நம்புகிறோம்.

பம்பாய் ஹோமியோபதி மசோதா 1951

1951ம் வருடத்து பம்பாய் ஹோமியோபதி மசோதா சென்ற 24—9—51 அன்று பம்பாய் சட்டசபையில் ஒப்புக்கொள்ளப்பட்டு சட்டமாகிவிட்டது என அறிகிறோம். அதற்கு இன்னமும் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்றும், கூடியவிரைவினில் இந்த அங்கீகாரம் கிடைத்தவுடன் அது அமுலில் வரும் என்றும் தெரிகிறது. இந்த சட்டத்தைப் பற்றி வரும் நமது ஹோமியோபதி இதழ்களில் நமது அபிப்பிராயங்களை வெளியிடுவதுடன், நமது சென்னை மாகாணத்தில் அரசாங்கம் செய்யவேண்டுவனவற்றையும் எடுத்துக்கூறுவோம்.

நவீன கருப்பத்தடை முறைகள்.

(மிதுனம்)

உலகிலே ஜனத்தொகை தங்கு தடையின்றி விருத்தியாவது பலபிரச்னைகளை உண்டாக்கி விடுகின்றது. சமீப காலங்களிலே நம் நாட்டில் ஜனத்தொகை பீதிப்படும் அளவுக்கு விருத்தியாகி வருகிறது என்பது அவ்வப்போது பத்திரிகைகளில் நாம் காணும் புள்ளி விபரங்களிலிருந்து தெளிவாகின்றது. ஜனத்தொகை விருத்தியானல் நமது ஊண் உடைபோன்ற அன்றாடத் தேவைகளும் விருத்தியாகின்றன. தேவைக்குப் போதுமானவற்றை நாம் உற்பத்தி செய்ய முடியாமல் போகவே, இந்த நிலைமை மேலும் பல சிக்கல்களை உண்டாக்கி விடுகின்றது. இதுவரையில் எந்த அளவுக்கு ஜனத்தொகை பெருகி வருகின்றதோ அதே அளவுக்கு மேலும் மேலும் அது பெருகி வருமானல், வரும் காலங்களில் நிலைமை கவலைக்கு இடமாகிவிடும் என்றே விஷயமறிந்தவர்கள் கருதுகின்றனர். ஆகவே இனிவரும் காலத்திலாயினும் நமது பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்தி, அதை ஒரு வறையறைக்கு உட்படுத்தி வைக்கும் நோக்கத்துடன், சமீபகாலங்களில், நவீன கருத்தடை முறைகளைப்பற்றி ஆங்காங்கே சர்ச்சைகள் எழுந்து வருகின்றன. ஆனல் கருத்தடைக்கு நாம் நமது தேசத்தில் கையாளக்கூடிய சரியானவழி என்னவென்பதை நிதானித்துத் தீர்மானம் செய்வதில்தான் மிகுந்த சிரமம் இருக்கின்றது.

கருத்தடைக்கு, அதிலும் பெருவாரியாக, அனுசரிக்கப்படும் வழிகள் சுலபமானதாகவும் அம்மாதிரியாக அனுசரிக்கப்படும் வழிகளினல், சம்பந்தப்பட்ட நபர்களுக்கு யாதொரு கெடுதலும் ஏற்படாத வகையிலும் இருக்கவேண்டும். தவிர அனுசரிக்கப்படும் கருத்தடைமுறைகள் நம் நாட்டிலுள்ள

அனைவருக்கும் அவர் படித்தவராயினும் படிப்பில்லாதவராயினும், எளிதில் பழக்கத்தில் கொண்டுவரக் கூடியதாகவும் இருக்கவேண்டும். இவ்வாறு இல்லாத கருத்தடைமுறைகள் நடைமுறையில் உபயோகமில்லாததாகவே ஆகிவிடும்.

"ஹோமியோபதியில் கருத்தடைமுறை இருக்கிறதா" என்றும், "ஹோமியோபதியில் கருப்பத்தடைக்கு மருந்து உண்டா" என்றும் அடிக்கடி பல நண்பர்கள் நமக்குக் கடிதம் எழுதி வருகின்றனர். இவர்கள் இவ்வாறு எழுதுவதற்குக் காரணம் ஹோமியோபதியின் தத்துவங்களை இவர்கள் சரிவர உணராததேயாகும். ஹோமியோபதியின் தத்துவங்களின் படி சரீரத்தில் வியாதியுற்ற நிலைமைகளைச் சரி செய்து, சரீரத்தை இயற்கையான நிலைமைக்குக் கொண்டுவரவே ஔஷதங்கள் உண்டு. ஆனால் இயற்கையாக உள்ள ஒரு நிலைமையை மாற்றி விடுவதற்கு ஹோமியோபதியில் ஔஷதங்கள் இல்லை என்பதை நாம் அறியவேண்டும். ஸ்திரீபுருஷ சேர்க்கையால் கருப்பம் ஏற்படுவது இயற்கையான நியதியாகும். ஆகவே ஹோமியோபதியில் இந்த இயற்கை நியதியை மாற்றக்கூடிய ஔஷதங்கள் இருக்கமுடியாது. இயற்கையை மாற்றக் கூடியவைகள், சரீர அவயவங்களின் தொழிலை மாற்றக்கூடியவைகளாகத்தான் இருக்க வேண்டும். இம்மாதிரி ஔஷதங்கள் அல்லது சாதனங்கள் ஹோமியோபதி தத்துவங்களுக்கு வேறுபட்டுத்தான் இருக்கவேண்டும். வேறு வழியில்லை.

இனி எந்த வழிகளால் கருக்கரிப்பதை தடை செய்யலாம் என்று ஆராய்வோம். நிச்சயமாகவும், சரீரத்திற்கு யாதொரு தீங்கும் செய்யாமலும், அதனால் ஒரு இம்மியளவு கூட கெடுதல் ஏற்படாமலும் ஒரு கருப்பத்தடை சாதனம் இருக்க வேண்டுமென்றால் அது ஒருவர் கருப்பம் ஏற்படும் சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொள்ளாமல் இருப்பதுதான். ஆனால் இது இன்றைய சூழ்நிலையில் சாத்தியமா? நிச்சயமாக இல்லை என்றே சொல்லிவிடலாம். ஆகவே இனி நாம் இங்கு கவனிக்க

வேண்டியது, ஸ்திரீ புருஷ சம்பந்தம் ஏற்பட்டாலும் எப்படிக் கருத்தரிக்காமல் செய்யலாம் என்பதே. இதற்கு இதுவரையில் பல வழிகள் கையாளப்பட்டு வந்திருக்கின்றன. இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவிதமான கெடுதல்களோ அல்லது இடைஞ்சல்களோ இருக்கத்தான் செய்கின்றன.

சாதாரணமாக ரப்பர் கருவிகளில் ஆண் பெண்கருவிகளை புணர்ச்சி காலத்தில் உபயோகிப்பது என்று ஒரு வழக்கம் சிலரிடையே இருந்து வருகிறது. இம்முறையில் இரண்டு முக்கியமான சங்கடங்கள் இருக்கின்றன. முதலாவது புணர்ச்சியில் இச்சை உண்டாகும்போது நிதானமாகக் கருவிகளைப் பூண்டு கொள்ளவேண்டும். அப்படிப் பூண்டாலும், புணர்ச்சியில் எதிர்பார்க்கும் அளவு சுகம் கிடைப்பதில்லை. தவிர மிகவும் மெல்லிய ரப்பரினால் செய்யப்பட்டவை யாதலின் அவை புணர்ச்சிக் காலத்தில் கிழிந்து விடுவதற்கும் ஏதுவுண்டு. அவ்வாறு எதிர்பாராமல் கிழிந்துவிடுமானால் எந்தப் பலனை உத்தேசித்து அது உபயோகிக்கப் பட்டதோ அது வியர்த்தமாகவும் ஆகிவிடலாம்.

இரண்டாவதாகச் சில மருந்துகளை யோனியின் உள்ளே செலுத்திவிட்டு அதன் பிறகு சுகித்தல். ஆண் சுக்கிலத்தில் கருவை உற்பத்தி செய்யும் சக்தி, அதிலுள்ள பல்லாயிரக் கணக்கான உயிர் அணுக்களில் (Spermatozoa) ஒன்றுதான் என்று கண்டுபிடிக்கப் பட்டிருப்பதால், இந்த உயிர் அணுக்கள் அவ்வளவையும் சக்தியற்றவையாகச் செய்துவிட்டால், கருக் தரிக்காது என்பது உண்மை. ஆக்வேதான் இந்த உயிர் அணுக்களின்மேல் பட்டவுடன் அவைகளைச் சக்தியற்றுப் போகும்படிச் செய்யும் ஔஷதத்தை யோனியில் செலுத்திவிட்டு அதன் பின்னர் சுகித்தல் ஒரு முறையாகும். இவ்வாறு உபயோகிக்கப்படும் ஔஷதங்கள் மாத்திரைகளாகவும், பசைகளாகவும் தற்பொழுது கிடைக்கின்றன. இவ்வாறு உபயோகிக்கப்படும் ஔஷதங்கள் ஷை உயிர் அணுக்களை

நிச்சயமாய்க் கொல்லக்கூடியவையாகவும், ஆனல் அது தடவப் படும் பாகங்களின் பூந்தசை (Mucous membranes) களுக்கு யாதொரு கெடுதலும் செய்யாதவைகளாகவும் இருத்தல் அவசியம். இதில் எதிர்பார்க்கும் பலன் நமக்குக் கிடைப்பது உபயோகிக்கப்படும் ஔஷதத்தைப் பொருத்ததாகவும், அதை சரியானபடி உபயோகிப்பதையும் பொருத்துமே இருக்கின்றது சுக்கிலத்திலுள்ள உயிர் அணுக்கள் எந்த அமிலத்தின் (Acid) மேல் பட்டாலும் உடனே சக்தியற்றுப் போய் விடுகின்றன வாதலால், உபயோகிக்கப்படும் மருந்தில் பூந்தசைகளுக்குக் கெடுதல் உண்டு பண்ணுத அமிலமே இருக்கவேண்டும். இந்த விஷயமாகத் தொன்றுதொட்டு சில சரக்குகள் நமது புராதன ஆயுர்வேதத்திலும் காணப்படுகின்றது. அவைகளில், எலுமிச்சம் பழரசம், வேப்ப எண்ணெய், தேன் முதலிய மூன்றும் முக்கியமாகச் சொல்லப்படுகின்றன. இவைகளிலுள்ள குண குணங்களை ஆராயப்புகின் எலுமிச்சம் பழச்சாறு சில சமயம் எரிச்சலை உண்டுபண்ணலாம். வேப்ப எண்ணெயோ வெனில், அதில் ஏற்படும் துர்வாடையினுல் உபயோகத்திற்குப் பிரயோஜனம் அற்றதாகப் போய்விடுகின்றது. மூன்ருவதாகத் தேனை எடுத்துக்கொண்டால், இது சில விஷயத்தில் மற்ற எல்லாவற்றையும்விட உயர்ந்ததாகக்கூட கருதப்படலாம். சுகிப்பதற்குமுன் யோனியிலும் ஒரு டீஸ்பூன் தேனை உட்செலுத்தி நன்கு தடவிவிட்டு ஆண்குறியிலும் இதைத் தடவிக்கொண்டு சுகிப்பதால், இது ஏற்படுத்தும் குழகுழப்பினுல் சுகிப்பதும் இன்பமாக இருப்பதுடன், தேன் ஆண்குறியின் விறைப்புத் தன்மையை அதிகப்படுத்துவதாகவும், ஸ்திரீகளின் ஜனனேந்திரியப் பூந்தசைகளை மிருதுவாகவும் கெட்டியாகவும் வைத்திருக்கவும் ஒரு நல்ல ஔஷதமாகவும் உபயோகிக்கப் படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனல் இதிலுள்ள சிரமம் என்னவெனில், இதிலுள்ள தித்திப்புத் தன்மையால், சிறிது படுக்கையிலோ துணியிலோ சிந்திவிட்டால் எறும்பு முதலியவைகள் அதிகத் தொந்திரவைக் கொடுக்கலாம். ஆனல் இதற்கும் மாற்று செய்வது அவ்வளவு சிரமமில்லை என்றே

நினைக்கவேண்டி இருக்கிறது. உதாரணமாகக் கீழே கண்டபடி ஒரு பாட்டிலில் தேனைத்தயார் செய்து வைத்துக்கொண்டு உபயோகிப்பதில் அதிகக் கஷ்டம் ஏற்படாதென்பது உறுதி. சுத்தமான தேன் 8 அவுன்ஸ், போரிக் ஆசிட்பவுடர், ½ அவுன்ஸ், கற்பூரம் 1 டிராம். இவைகளை ஒன்றாகக் கலந்து வைத்துக்கொண்டு அவ்வப்போது உபயோகிப்பதால் எறும்பு முதலியவைகள் அணுகாமலும் செய்து கொள்ளலாம், எதிர் பார்க்கும் பலனையும் அடையலாம். இது மிகவும் சிக்கனமாகவும் அனுபவ சாத்தியமாகவும் இருப்பதால் நம் நாட்டிற்கு உகந்த தென்றே நினைக்கவேண்டி இருக்கிறது.

அடுத்தபடியாக, கருத்தரிக்காமலிருப்பதற்காக நிச்சயமாக ஏற்பட்ட வழிகளில் ஆண்களோ பெண்களோ, ஆபரேஷன் செய்து கொள்வதாகும். ஆண்கள் செய்து கொள்ளும் ஆபரேஷனுக்கு வாசக்டொமி (Vasectomy) என்றும், பெண் களுக்குச் செய்யப்படும் ஆபரேஷனுக்கு சால்பிஞ்செக்டொமி (Salpingectomy) என்றும் சொல்லப்படும்.

இந்த சால்பிஞ்செக்டொமி என்ற ஆபரேஷன் ஒரு பெண் செய்து கொள்வது மிகவும் சிரமமானது, ஏனெனில் இது அடிவயிற்றைக் கிழித்து உள்ளே கருப்பையின் இரண்டு பக்கங்களிலிருந்தும் சினைப்பைகளுக்குச் செல்லும் வல்லோபியன் (fallopean) குழய்களை வெட்டுவதாகும். இவ்வாறு சினைப் பைக்கும் கருப்பைக்கும் இடையிலுள்ள குழாயின் ஒரு பாகம் வெட்டப்படுவதால் சினைப்பையிலிருக்கும் முதிர்ந்த சினையை ஆண் விந்து வந்து அடைந்து கருவேற்ற முடியாது என்பது கொள்கை. இந்த ஆபரேஷன் மிகவும் பெரிதாகையால் இதை அனைவரும் செய்துகொள்ளவும் முடியாது. தவிர இந்த ஆபரேஷனைச் செய்துவிட்டால், மறுபடி அதே ஸ்திரீ தனக்கு ஒரு குழந்தை வேண்டுமென்று நினைத்தால் அந்தப் பாக்கியத்தைப் பெறவும் முடியாது.

ஆனால் ஆண்கள் செய்து கொள்ளக்கூடிய ஆபரேஷன் (அதாவது வாசக்டமி) அவ்வளவு சிரமமானதல்ல. இதில் வாஸ் டிபரன்ஸ் (Vas deferens) என்னும் இரு பக்கங்களிலுமுள்ள சிறு குழாய்கள் துண்டிக்கப்படுகின்றன. இந்த ஆபரேஷனை இதுவரையில அநேகர் செய்து கொண்டிருக்கின்றனர். இந்த ஆபரேஷன் திருப்திகரமாய்ச் செய்யப்பட்டுவிட்டால், மறுபடி அதே நபர் தனக்கு ஒரு குழந்தை வேண்டுமென்று நினைத்தால் அது சாத்தியமாக மாட்டாது.

சமீபகாலத்திலே, மேற்கண்ட ஆப்ரேஷன்கள், மருந்துகள் முதலிய யாதொன்றுமில்லாமல் கருப்பத்தடை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று சில டாக்டர்கள் ஆராய்ச்சி செய்து சில விபரங்களையும் தெரிவித்திருக்கின்றார்கள். இதுவிஷயமாக அமெரிக்காவில் **டாக்டர் மாரிஸ் பிஷ்பீன்** என்பவர், "**காஸ்மா பாலிடன்**" என்னும் சஞ்சிகையில் சில ஆராய்ச்சிகளை வெளியிட்டிருக்கின்றார். அதன்படி, ஸ்திரீ புருஷ சேர்க்கை, எந்தக் காலத்தில் ஏற்பட்டால் கரு உற்பத்தி உண்டாகுமென்றும், எந்தக்காலத்தில் ஏற்பட்டால் கரு உற்பத்தி உண்டாகாதென்றும் கண்டுபிடித்துவிடலாம் என்பது இந்த டாக்டரின் அபிப்பிராயம்.

"கருப்பம் ஏற்படவேண்டுமாயின், சுக்கிலத்திலுள்ள உயிர் அணு (Sperm) வல்லோபியன் குழாய் வழியாகச்சென்று அங்கு முதிர்ச்சி அடைந்து தயாராக இருக்கும் சினையை (ovum) அடையவேண்டும். ஆண் உயிர் அணு உட்செல்லும் போது முதிர்ச்சி அடைந்த சினை அங்கு தயாராக இல்லாமல் போனால் கருப்பம் ஏற்பட ஏதுவில்லை. ஒரு மாதவிடாய் ஏற்படுவதற்குச் சுமார் 14 தினங்களுக்கு முன்தான் ஒரு சினை முதிர்ச்சி அடைகிறது. இவ்வாறு ஒரு சினை முதிர்ச்சி அடைந்த சுமார் 36 மணி நேரத்திற்குள்ளாக அது கருவேற்பட்டால்தான் கருப்பம் ஏற்பட ஏதுவுண்டு; ஏனெனில் அக்காலத்தில் அந்த சினை கருவேற்றப்படாவிட்டால் அதன்பிறகு அது நசித்துவிடுகிறது. ஆகவே ஒரு ஸ்திரீ தன்னிடம் எப்பொழுது முதிர்ச்சி

அடைந்த சினை இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டு விடுவாளாயின், அக்காலத்தில் சுகிப்பதினால் தனக்கு நிச்சயமாகக் கருப்பம் ஏற்படுமென்று நம்பலாம். கருப்பத்தை விரும்பாதவர்கள், இந்தக்காலத்தை நன்கு தெரிந்து கொண்டால் அதற்குமுன்னும் பின்னும் ஒன்றிரண்டு தினங்கள் சுகிக்காமல் இருந்து மற்றக்காலங்களில் சுகித்தால் கருப்பம் ஏற்படாமலிருக்க சந்தர்ப்பம் அதிகம் உண்டு.'' என்பதுதான் இந்தமுறையின் சாராம்சம்.

ஆனால் ஒரு ஸ்திரீ தனக்கு எப்பொழுது ஒவுலேஷன் (அதாவது சினை முதிர்ச்சி அடைதல்) ஏற்படுகிறது என்பதை எப்படித் தெரிந்துகொள்ள முடியும் என்கிற கேள்வி எழுகிறது. இதை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம் என்றே கருதப்படுகிறது. ஒரு ஸ்திரீயின் சரீர உஷ்ணத்திற்கும் (Temperature) அன்னவளுடைய ஒவுலேஷனுக்கும் சம்பந்தம் இருக்கிறது என்பது சமீபகாலத்தில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

ஒரு ஸ்திரீ, தனது ஒரு மாதவிடாயிலிருந்து மறு மாதவிடாய் வரையில், பிரதி தினமும் காலையில் தூங்கி விழித்தவுடன், ஆனால் படுக்கையிலிருந்து எழுந்திருப்பதற்கு முன்னமேயே, தன்னுடைய சரீர உஷ்ணத்தை, (Temperature) உஷ்ணமானி கொண்டு பார்த்துக் குறித்து வைத்துக் கொண்டால், சில விஷயங்கள் தெரியவரும். இவ்வாறு சரீர உஷ்ணத்தை அளப்பதில் முக்கியவிஷயம் என்னவெனில், படுக்கையிலிருந்து எழுந்திருப்பதற்கு முந்தி அது செய்யப்பட வேண்டுமென்பதே.

மாதவிடாய் ஆரம்பிப்பதற்குச் சுமார் 24 அல்லது 36 மணி நேரத்திற்கு முன் சரீர உஷ்ணம் திடீரென்று குறைவு படுவது தெரியவரும். தவிர மாதவிடாய்ப் போக்கு ஆரம்பித்து ஒன்றிரண்டு தினங்களில் அது மிகவும் குறைவாக இருக்கும். இது இவ்வாறு குறைவாக இருந்து சில தினங்கள் கழித்து

திமென்று உயர்வாகக் காண்பிக்கும். எப்பொழுது சரீர உஷ்ணம் உயர்வாகக் காண்பிக்கிறதோ அதே சமயம்தான் ஒவுலேஷன் ஏற்படுகிறது. எப்படி மாதவிடாய் ஒவ்வொரு ஸ்திரீக்கும் குறிப்பிட்ட இடைவெளிகளில் ஏற்படுகிறதோ, அப்படியே இந்த ஒவுலேஷன் என்னும் விஷயமும் ஒவ்வொரு ஸ்திரீக்கும் குறிப்பிட்ட காலங்களில் சரியாக ஏற்படுகிறதென்றும் அது மாதவிடாய் ஏற்படுவதற்கு எத்தனை நாட்களுக்கு முந்தி ஏற்படுகிறதென்றும், இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு விடியற்காலையில் மேலே சொன்னவாறு சரீர உஷ்ணத்தை அளப்பதின் மூலம் தெரிந்துகொண்டு விடலாம். ஒரு ஸ்திரீக்கு ஒவுலேஷன் மாதவிடாய் ஏற்பட்ட எவ்வளவு தினங்களில் ஏற்படுகிறதென்பதை தெரிந்து கொண்டுவிட்டால் அதற்கு இரண்டு தினங்களுக்கு முந்தியும், அதற்கு இரண்டு தினங்கள் அடுத்தும் சுகிக்காமல் இருப்பின் கருப்பம் ஏற்பட சந்தர்ப்பம் இருக்காது என்பது கொள்கை. தவிர குழந்தை வேண்டுமென்று விரும்புபவர்கள், இக்காலங்களில் சுகிப்பதின் மூலம் அப்பாக்கியத்தைப் பெறவும் ஏதுவுண்டு.

நாம் மேலே காட்டியவைகளைத் தவிர மற்றும் சிலவழிகளும் இதுவிஷயமாக அவ்வப்போது பரீட்சிக்கப்படுகிறதென்றாலும், எந்த ஒரு வழியும் எல்லாவிஷயங்களிலும் திருப்திகரமாக இருக்கவில்லை என்பது நிதரிசனமாகக் கண்டு கொண்ட விஷயமாகும். உண்மையாகவே நோக்குமிடத்து இயற்கை நியதியை வெல்ல எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் அதை முழுவதும் நம்மால் வென்றுவிடலாம் என்று சொல்வதற்கில்லை யல்லவா? அதனால்தான் நமது தேசபிதா மஹாத்மா காந்தியடிகள், கருப்பத்தடைக்கு நியாயமானதும் நிச்சயமானதுமான ஒரே வழி "இச்சையை அடக்குவதுதான்" என்று கூறினார்கள்.

ஹோமியோபதியின் வேதாந்தம்

By Dr. S. N. K. MOORTHY, Bombay.

(முன் தொடர்ச்சி)

ஸ்லோகம் 155

நாம் அதிக சிரமமில்லாமல் அகற்றி விடுகிறோம் என்று முன் ஸ்லோகத்தில் கூறினோம் அது எவ்விதம் சாத்தியமாகும் என்று கவனிக்குப்போது, நாம் கொடுக்கும் மருந்தானது தன்னுடைய விசேஷ ஒற்றுமை சக்தியினால் வியாதியின் குறிகள் எவ்விடத்தில் பரவி யிருக்கின்றனவோ, அவ்விடங்களிலே சென்று தாக்குவதால் (இதற்குத்தான் நாம் பொறுக்கி எடுக்கும் மருந்தானது வியாதியின் சக்தியை காட்டிலும் அதிக சக்தி வாய்ந்ததாய் இருக்கவேண்டுமென்பது) குறைந்த பலமுள்ள குறிகள் பலமுள்ள தன்னைப்போல் ஒற்றுமையான குறிகளைக் கண்டவுடனே சூரியனைக்கண்ட பனிபோல் மிகவும் சுலபமாக நீங்கி விடுகின்றன.

நாம் கொடுக்கும் மருந்தினுடைய மற்றக்குறிகள் வியாதிக்கு சம்பந்தப்படாத குறிகள் ஆனதினால் அவை யாதொரு வேலையையும் செய்வதில்லை. வியாதி எந்த இடங்களில் பரவியிருக்கின்றதோ அதே இடங்களில்தான் மருந்தும் பரவும். எதிரிகள் இருக்கும் இடத்திற்குத்தான் சேனைகள் அனுப்பப்படும். மற்ற இடங்களுக்கு சேனைகள் போகும் சக்தியை உடைத்தாயிருந்தால்கூட அவசியமில்லாததினால் அவ்விடங்களில் அவை செல்லவேண்டிய அவசியமில்லை. பிணியாளரும் மணிக்கு மணி, நாளுக்கு நாள் தனக்கு தெரியாமலேயே கொஞ்சம் கொஞ்சமாக குணமடைந்து விடுகின்றனர் ஏனென்றால் கொடுக்கும் மருந்தானது அந்தராத்மாவவ தேவைக்கு தகுந்த அளவு உதவி செய்து எதிரியை விரட்டுவதோடு நின்று விடுகிறதே ஒழிய மற்ற பாகங்களில் (வியாதிக்குட்படாத பாகங்களில்) ஒருவித

குறியையும் தோற்றுவிக்கா. இதனுல்தான் வியாதியின் குறிகள் படிப்படியாக அகன்று விடுவது எளிதாகின்றது.

ஸ்லோகம் 156

இன்னும் உட்புகுந்து ஆராய்வோமானுல், எவ்வளவு சாமர்த்தியமாகப் பொறுக்கி எடுத்த மருந்துகூட ஒற்றுமையாக வேலை செய்யும் பொழுதே மிகுந்த உணர்ச்சியுள்ள பிணியாளர்களிடத்தில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு சம்பந்தமில்லாத குறிகளை ்தோற்றுவிக்கலாம். இது வியாதி தன் பாட்டுக்கு குணமடைந்துக் கொண்டு வரும்போதே தோன்றலாய். இந்த ஒன்றிரண்டு சம்பந்தமில்லாத குறிகளை அகற்றுவதற்கு அந்தராத்மாவின் (Vital force) சக்தியே போதுமானதாகையால் அதுதானே அகன்றுவிடும் இதுபோன்ற சமயங்களில் வியாதியஸ்தர்கள் மனதாலேயோ, அல்லது அபரிமிதமான கண்டபடி உண்பதினுலேயோ வியாதி குணமாகுவதற்கு இடைஞ்சல் செய்யக்கூடாது.

ஸ்லோகம் 157

ஹோமியோபதி மருந்தானது உபயோகிக்கப்பட்டவுடனே தன் குறிகளைப்போல உள்ள குறிகளை சுலபமாக அகற்றி விடுகிறது என்று கூறினுலும்கூட இவைகள் (இந்த மருந்துகள்) சில சமயங்களில் மருந்து கொடுத்தவுடனேயோ அல்லது சில மணிநேரம் கழித்தோ வியாதியினுடைய குறிகளை அதிகமாக்கித் தோற்று வித்தாலும் தோற்றுவிக்கலாம், இது மருந்தினுடைய (இருக்கும் வியாதியின் சக்தியைவிட) அதிக சக்தியுடைத்தலின் காரணத்தினுலேதான்

ஸ்லோகம் 158

தோன்றி மறையும் (Acute) வியாதிகளில் இப்படி குறிகள் மருந்து கொடுக்கப்பட்டவுடன் அதிகமாகிக் காணப்படுவது ஒரு நற்குறியேயாகும் ஏனென்றுல் இது வைத்தியருக்கு

வியாதியின் முடிவு எப்படியாகும் என்று ஒருவாறு சொல்லுவதற்கு (Prognosis) ஒரு அடையாளமாகின்றது. இந்த முதல் வேளையில கொடுக்கப்பட்ட மருந்தே வியாதியை கண்டிக்கும் சக்தியுள்ளது என்பதற்கு இதுவே அறிகுறியாகும் வன்? இது நியாயந்தானே. வியாதிகள் ஒன்றுக்கொன்று சமமாயிருப்பதைவிட கொடுக்கும் மருந்தின் சக்தி அதிகமாக இருந்தால்தானே இருக்கும் வியாதியை அகற்றமுடியும்?

தொடரும்

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்

ஹோமியோ ஹவுஸ் :: கும்பகோணம்

★

1952-ம் வருடத்து

கோடைக்கால நேர்முக வகுப்பு

(பத்தாவது நேர்முக வகுப்பு)

★

எல்லா வருடங்களைப்போல இவ்வருடமும் நமது இன்ஸ்டிட்யூட்டின் நேர்முக வகுப்புகள் 28—4—52 அன்று ஆரம்பமாகிறது. இவ்வகுப்புகள் பற்றிய விபரங்களை எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

செக்ரெடரி.

‘ஹோமியோபதி’யும் ஹோமியோபதியர்களும்

(டாக்டர் ஸ்ரீமதி சிவஞானசுந்தரம் M. I. H. (Hom.) சுரண்டை)

இதோ ஹோமியோபதியர்களாகிய நம் முன் நம் வருங்கால வாழ்வினை உருவாக்க மனமுவந்து உற்ற தருணத்தில் தொடர்ந்து தன் ஐந்தாவதாண்டு தமிழ் முதல் இதழையும் முதல் ஆண்டு ஆங்கில முதல் இதழையும் நம் முன் சமர்ப்பித்திருக்கின்றாள் நம் அன்னை “ஹோமியோபதி”.

நாம் அனைவரும் நம் அன்னை ஹோமியோபதிக்குச் ‘செய்ய வேண்டுவதென்ன? ஐக்யமாக ஒன்றுபட்டு வரவேற்று வேண்டுவனசெய்து உபசரிப்பது நமது கடனல்லவா? நம்மில் ஒரு சாரார் விருப்பற்றவர்ளாய் பொறுப்பற்றவர்களாய் நடந்து கொள்ளுவது நியாயமாகுமா?

மக்களாகிய நாம் நம் அன்னை ஹோமியோபதிக்குச் செய்ய வேண்டுவது ஒன்று உண்டு. நாம் அனைவரும் உடனடியாகச் சந்தாதாரராகச் சேருவதுதான். அன்னை வளம்பெற மக்கள் வளம்பெற, மாணிலத்தோர் போற்ற, வாழ்வுகொள்ள உறுதி பூண்டு ஒன்றுபட்டு முன் வாருங்கள் பார்ப்போம்.

நாம் ஒவ்வொருவரும் நம் அன்னை ஹோமியோபதிக்குச் செய்யவேண்டுவது ஒன்றும் உண்டு. அங்காங்கே மூலை முடுக்குகளிலெல்லாம் சிதறிக்கிடக்கும் ஹோமியோபதியர்களையும், ஹோமியோபதி அபிமானிகளையும் தேடிச் சென்று விபரமாக விஷயத்தை எடுத்துக்கூறி உடனடியாக “ஹோமியோபதி”க்கு அவர்களை சந்தாதாரராக்குவதுதான். இது நம் அன்னைக்கு நாம் செய்யும் கடமையும் முதற் பணியுமாகும்.

இரண்டாவதாக இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டின் பழைய மாணவர் சம்மேளனத்தில் மெம்பர்களாகச்

சேருவது. இன்றைய உலக அரங்கில் நம் சுதந்திரம் கோரி மன்றாடுவது.

ஒன்று பட்டாலே உண்டு வாழ்வு.

காலத்தைத் தளர்த்தாது ஒன்றுபட முன்வாருங்கள். "ஹோமியோபதி" தமிழ் அல்லது ஆங்கில மாத சஞ்சிகைக்கு சந்தாதாரராகுங்கள். பின்னால் நம் சம்மேளனம் விருத்தி யடைந்து நமக்கு நற்பயன் தானே தரும். ஹோமியோபதியும் ஹோமியோபதியர்களும் வாழ்க. வணக்கம்.

நமது "ஹோமியோபதி" பற்றி

டாக்டர் H. முனுசாமி ராவ், உத்தமபாளையம் வணக்கம் 1952 ஜனவரி இதழ் கிடைத்தது பார்த்தேன் எனக்கு மகிழ்ச்சி. முந்திய வெளியீடு சஞ்சிகைகளைப் பார்க்கிலும் இந்த வெளியீடு மிக மிக நல்ல முறையில் விஷயங்கள் அடங்கியதும் அனாவசியமான கட்டுரைகள் இல்லாமலும் இருக்கிறது இவ்விதமே இருப்பது ஹோமியோபதிக்கு கௌரவம் அளிப்பதுடன், வளர்ச்சியும் உண்டாகும், என்பது எனது துணிவு *(26 - 1 - 52)*

மேலப்பாளையூர் டாக்டர் R. சுவாமிநாதன், M. I. H. *23—1—52*ல் எழுதுகிறார்:-

நமஸ்காரம் "ஹோமியோபதி" இதழ் கிடைக்கப்பெற்றேன். நல்ல "செட் அப்" உடன் வெளிவரும் மேல் நாட்டு மெடிக்கல் ஜெர்னல்களை பார்க்கும் போதெல்லாம் இம்மாதிரி நம் நாட்டில் ஒரு பத்திரிகைகூட வெளிவரவில்லையே என ஏங்குவேன். இனி நான் ஏங்கவேண்டியது இல்லை. என் ஏக்கத்தைத்தான் "ஹோமியோபதி" போக்கிவிட்டதே.

மெட்டீரியா மெடிகா—குறிப்புகள்

எதுஸா சைனபியம்

முக்கியமாகச் சிறு குழந்தைகளுக்கு உபயோகமாகும். அவைகளுக்குக் கடுங் கோடையிலும், பல்முளைக்குங் காலங்களிலும் ஏற்படும் பல கோளாறுகளுக்கு ஏற்ற ஔஷதம்.

குடிக்கும் பால், அது தாய்ப் பாலாய் இருந்தால்கூட ஒத்துக் கொள்ளாமை. பால் குடித்தவுடன் வாயாலெடுத்தல், அப்படி வாயாலெடுப்பதும், கட்டி கட்டியாகத் தயிர்போல் இருத்தல். வாயாலெடுத்தபின் மயக்கமாகத் தூங்குதல்.

பல்முளைக்கும் காலத்தில் ஏற்படும் அசீரணம், வாயாலெடுப்பு.

சிசுக்கள் மந்தமாகவும் மனக் குழப்பத்தில் இருப்பது போலவும் காணப்படுதல்.

அதிக பலவீனம், நிற்கக்கூட முடியாமை; தலையை நிமிர்த்தி வைத்துக்கொள்ள முடியாத அளவுக்குப் பலவீனமும், மயக்கமும்.

வலிப்புகள்: முகம் சிவந்து, கைவிரல்கள் இறுக மூடி, கண்கள் மேற்பக்கமாகச் சொருகி, வாயில் நுரைதள்ளுதலும், வாய் பூட்டுதலும். இவைகளுடன் பலவீனமான, ஆனால் வேகமுள்ள, நாடித்துடிப்பு. பால வைத்தியத்தில் 'எதுஸா' ஒரு முக்கியஸ்தானம் பெறுகிறது.

ஒவ்வொரு நாளும் உண்ணும் உணவில் 'வைடமின் சி' வேண்டும்

சொறி சிரங்கு முதலியவை வராமல் காக்கக்கூடிய வைட்டமின் 'சி' என்னும் சத்துப்பொருளை அன்றாடம் உணவில் சேர்த்து வரவேண்டுமென அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். உடம்பு இவ்வகை வைட்டமின் சத்தைப் பல நாட்களுக்குச் சேர்த்து வைத்துக்கொள்ள இயலாதது என சுட்டிக் காட்டுகிறார்கள்.

'வைடமின் சி' என்னென்ன பொருள்களில் உண்டு? அநேக அமெரிக்கர் காலையில் ஆரஞ்சுப் பழசாறு அருந்துகிறார்கள்; அல்லது அவ்வகையைச் சார்ந்த வேறு பழவகைகளை உண்கிறார்கள். எலுமிச்சையும் அந்த வகையைச் சேர்ந்ததே. இவற்றில் எல்லாம் 'வைட்டமின் சி' உண்டு. இன்னும் பலர் காலையுணவைத் தவிர்த்த மற்ற வேளை உணவோடு பச்சைக் காய்கறிகளை உண்டு 'வைட்டமின் சி' யைப் பெறுகிறார்கள்.

தக்காளி, பச்சை முட்டைக்கோஸ் முதலிய தழையுள்ள காய்கறிகளில் 'வைட்டமின் சி' நிறைய உண்டு. காலிபிளவர், கீரை வகைகள், நன்றாக வேகவைக்காத முட்டைகோஸ் முதலியவைகளிலும் வைட்டமின் மிகுதியாக உண்டு.

காச நோய்க்கு மனக்கவலை முக்கிய காரணம்

ஆஸ்த்மா வியாதி ஏற்படுவதற்கு மனக்கவலை ஒரு முக்கிய காரணமாகும் என்று பிரிட்டிஷ் டாக்டர் பொடோலிகாப் என்பவர் கருதுகிறார்.

இவர் சமீபத்தில் 12 ஆஸ்த்மா நோயாளிகளை பரிசீலித்ததாகவும் அவர்கள் ஒவ்வொருவரும் ஏதாவது மனக்கவலையாலேயே அவதிப்படுவதாகவும் அவர் கூறினர்.

இந்த 12 பேர்களில் 6 பேர் துரதிருஷ்டவசமான கஷ்டங்களை அனுபவித்தவர்கள். சிலர் அன்பு குறைவு காரணமாக மனசஞ்சலம் கொண்டவர்கள். மூவர் மரணம் ஏற்படுமோ என்ற பீதியில் இருந்தவர்கள்.

இந்த நோயாளிகள் என்ன காரணத்தினுல் கஷ்டமடைந்தார்கள் என்பதை டாக்டர்கள் உணர்ந்தால் சிகிச்சை செய்வது எளிதாகிவிடும் என்று அவர் கூறுகிருர்.

ரத்தப் புரோடின் பரீட்சை

வியாதிகளைக் கண்டுபிடிக்க புதுமுறை

நியூயார்க்கிலுள்ள ஒரு பிரபல ஆஸ்பத்திரியில் டாக்டராக இருக்கும் அப்ரஹாம் ஸைபர் என்பவர் வியாதிகளைக் கண்டு பிடிக்க புதுமுறையென்றை கண்டுபிடித்திருக்கிருர். ரத்தத்திலுள்ள புரோடீன் என்ற உணவுச் சத்தை அளப்பதன் மூலம் வியாதிகளைக் கண்டுபிடித்துவிடலாம் என்பது டாக்டர் அப்ரஹாமின் முடிவு. சில வியாதிகள் ரத்தத்திலுள்ள புரோடீனை அதிகப்படுத்துகின்றனவென்றும் இன்னும் சில வியாதிகள் புரோடீனைக் குறைக்கின்றனவென்றும் அவர் கண்டுபிடித்திருக்கிருர். இந்த ஆராய்ச்சியின் காரணமாக ரத்தப் பரிசோதனையிலிருந்தே அநேக தீவிர வியாதிகளைக் கண்டுபிடித்துவிடலாம், இந்தப் பரிசோதனைக்கு அதிக ரத்தம் கூடத் தேவையில்லை. ஒரு சொட்டு ரத்தத்தைக்கொண்டே பரிசோதனையை நடத்தலாம். இந்தப் புது முறையால் மனிதன் ரத்தத்தில் ஊறியிருப்பது என்ன வியாதி என்று திட்டமாகத் தெரிவதோடு சீக்கிரமாகவும் வியாதியைக் கண்டுபிடித்துவிடலாம்.

செயற்கை இரைப்பை

இப்பொழுது ரண வைத்தியர்கள் (சர்ஜன்கள்) நான்கு முதல் 6 மணி நேரத்தில் ஒரு நோயாளியின் இரைப்பையை நீக்கி ஒரு செயற்கை இரைப்பையைப் பொருத்தக்கூடும். ஸான்

பிரான்ஸிஸ்கோ அமெரிக்க ரண வைத்தியக் கல்லூரியில் இது விளக்கிக் கூறப்படுகிறது. சிறு குடலின் இறுதிப் பாகத்தாலும் பெருங்குடலின் ஆரம்ப பாகத்தாலும் இது செய்யப்படுகிறது.

சாதாரண ஆபரேஷனில் ரண வைத்தியர்கள் உணவு செல்லும் குழாயின் இறுதி பாகத்தையே கொக்கி உருவத்தில் அமைத்துவிடுவதுண்டு. ஆனால் ஆகாரம் தங்கவோ குழையவோ இரைப்பை இல்லாமல் போகிறது. ஆகாரம் குழைந்தால்தான் குடலுக்குச் சிரமம் குறைகிறது. ஒரு பைன்ட் திரவ பதார்த்தத்தைத் தாங்கும் செயற்கை இரைப்பையில் ஆகாரம் தங்கவும் குழையவும் இடமிருக்கிறது.

மாண்டவள் மீண்டாள்
டாக்டர்களின் அற்புத சாதனை

ஹிருதயத் துடிப்பு நின்று 45 நிமிஷங்கள் ஆனபிறகு மின் சாரத்தை உபயோகப்படுத்தி ஒரு நோயாளியைப் பிழைக்க வைக்க தங்களால் முடிந்தது என்று பிரஸ்வைட்டீரியன் ஆஸ்பத்திரி டாக்டர்கள் இன்று அறிவித்தனர். ரண சிகிச்சையின் போது ஆஸ்பத்திரியில் மாணவ நர்ஸாக இருந்துவந்த ஒரு நோயாளியின் மூச்சு நின்றுவிட்டது. உடனே இருதயத்தை மீண்டும் செயல்படச் செய்ய டாக்டர்கள் ஒவ்வொருவராக முயற்சித்தனர். ஆனால் அவர்கள் முயற்சி பலனளிக்கவில்லை. பிறகு அவர்கள் 110 வோல்ட் மின்சாரத்தை ஹிருதயத்திற்குள் செலுத்தினார்கள். 10 நிமிஷம் கழித்து ஹிருதயத் துடிப்பு மீண்டும் துவங்கி நோயாளி மூச்சுவிட ஆரம்பித்துவிட்டார். 45 நிமிஷம் கழித்த பிறகு நோயாளி தன் கண்களைத் திறந்து பார்த்தார். அந்த இளம்பெண் நர்ஸ் தற்போது மீண்டும் ஆஸ்பத்திரியில் சேவை செய்து வருகிறார். ஆஸ்பத்திரியில் சுகவீனமாக இருந்தது பற்றி தமக்கு ஒன்றும் ஞாபகமில்லை என்று அந்தப் பெண் நிருபர்களிடம் கூறினாள்.

சென்னை மாநில ஹோமியோபதியர்கள் மகாநாட்டு காரியதரிசி

டாக்டர் உ. பாக்கியநாதன்

அறிவிப்பதாவது:

பிப்ரவரி-மீ 24-ந்தேதி நடத்துவதாக இருந்த சென்னை மாநில ஹோமியோபதியர்கள் மகாநாடு சில தவிர்க்க முடியாத காரணங்களால், மார்ச்சு-மீ 9-ந்தேதி நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. அம்மகாநாட்டில் அவசியம் ஒவ்வொரு ஹோமியோபதியரும் கலந்துகொண்டு மகாநாட்டை சிறப்பிக்க வேண்டுவதுடன் ஆங்காங்குள்ள ஹோமியோபதியர்களை ஒன்று திரட்டியும், சங்கங்கள் பிரதிநிதிகளை அனுப்பியும், நம் கோரிக்கைகளை அடைய பாடுபடவேண்டியது நம் கடமை. இம்மகாநாட்டில் சென்னை மாகாண பிரபல ஹோமியோபதி டாக்டர்களும் இன்னும் பல முக்கியஸ்தர்களும் கலந்துகொள்கிறார்கள். ‘‘சிறு துளி பெருவெள்ளம்’ என்பதுபோலவும், ‘‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு’’ எனும் பாரதி வாக்குக்கிணங்கவும் ஹோமியோபதியர்களாகிய நாம் ஒன்றுபடும் காலம் நெருங்கிவிட்டது. நம் உரிமைக் குரல் எழுப்பும் நேரம் சமீபித்துவிட்டது. நம் ஓசை இந்தியா வெங்கும் ஒலிக்கும் சங்கநாதமாக முழங்க, சென்னை மாகாண ஹோமியோபதியர்கள் அணி அணியாக மதுரை நோக்கி வரும் காலம் வந்துவிட்டது. அக்காலம்தான் வருகிற மார்ச்சு-மீ 9-ந் தேதி. ஆகவே தாங்கள் ஒவ்வொருவரும் பணியாற்றுவதும், பொருள் உதவி சேர்த்து அனுப்புவதும் மிக மிக முக்கியம். ஒவ்வொரு சங்கமும் பிரதிநிதிகள் அனுப்பி தீவிர பங்கெடுத்து வேலை செய்வதுடன் மகாநாட்டின் மூலம் நம் கோரிக்கைகளை அடைய உறுதி பூண்டு உரிமைக்குப் போராடுவோமாக. வருகிற மந்திரிசபையில் மாற்றம் ஏற்படவருகிற இச்சூழ்நிலையில்

நம்முடைய கோரிக்கைகள் பூர்த்தியடைய வழிகாட்டவிருக்கும் இம்மகாநாட்டில் ஒவ்வொரு ஹோமியோபதியரும் தங்கள் கடமை எனக்கருதி பங்கு கொள்ளவேண்டுகிறோம்.

விபரங்களுக்கும் நன்கொடைகளுக்கும்:

61, கான்பாளையம் 3-வது தெரு, மதுரை. என்ற விலாசத்திற்கு எழுதவும்.

புதிய ஹோமியோபதி வைத்தியசாலைகள் திறப்பு

டாக்டர் ஈ மோசஸ் சாமுவேல் பால் M, I. H. B. (H) அவர்கள் அழகப்பபுரத்தில் ஹானிமேன் ஹோமியோ ஆஸ்பத்திரி என்ற பெயரில் **31 - 1 – 1952** வியாழக்கிழமை காலை **10** மணிக்கு ஒரு வைத்தியசாலை திறந்திருக்கிறார் என்று அறிகிறோம்.

1952 ஜனவரி மாதம் **21**ம் தேதி நாங்குனேரி தாலுக்கா, பணகுடி, தெற்கு ரதவிதி பகவதியா பிள்ளை காம்பவுண்டில் C. S. சொக்கலிங்கம் பிள்ளை H. B. அவர்களால் "தேவி விலாஸ் ஹோமியோபதி வைத்தியசாலை" திறக்கப்பட்டிருக்கின்றதென அறிகிறோம்.

மதுரை ஜில்லா ஐராவத நல்லூர் என்னும் ஊரில் இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டில் படித்து பாஸ் செய்த மாணவர் டாக்டர் S. ஆறுமுகம் M. I. H. அவர்கள் 6 – 2 – 52ல் "வளர்மதி ஹோமியோபதி டிஸ்பென்சரி"யை திறந்திருக்கிறார் என அறிகிறோம்.

குன்டோபாஸ்

"குன்டோபாஸ்" என்பது பயோ கெமிஸ்டிரி முறையில் முக்கியமான ஐந்து பாஸ்பேட்டுகளையும் கொண்ட ஒரு முக்கிய ஔஷதம்.

ஒவ்வொரு "குன்டோபாஸ்" மாத்திரையிலும், கல்கேரியா பாஸ், பெர்ரம் பாஸ், மெக்னிஷ்யா பாஸ், காலி பாஸ், நேட்ரம் பாஸ் இவை ஐந்தும் சரிசமமாக உள்ளன. இது ஒரு சாதாரண கலப்பு ஔஷதம் அல்ல. ஆனால் இந்தப் பாஸ்பேட்டுகளின் சுயநிலைமையில் கலக்கப்பட்டு, அதன்மேல் விரியப்படுத்தப் பட்டது ஆகும்.

"குன்டோபாஸ்" அனேக வியாதிகளில் மிகவும் உபயோககரமாக இருக்கிறது. முக்கியமாக நரம்பு சத்துக் குறைந்த உபாதிகளில் இது நல்ல வேலை செய்யும். வலிப்புகள், காக்கை வலிப்பு, மூளைக் கோளாறுகள், ஞாபக மறதி, நீரிழிவு, மதுமேகம், ஞாபகக் குறைவு, முதலிய வியாதிகளில் உபயோகிக்கலாம். பற்றுக்குறையும், அதிக அவசரமும் கலந்த இந்தக் காலங்களில், அதிக மூளை உழைப்புள்ள அனைவருக்கும் "குன்டோபாஸ்" ஒரு வரப்பிரசாதமே ஆகும்.

ஒவ்வொரு மாத்திரையும் 7½ க்ரெயின் எடை உள்ளது. இது பெரியவருக்கு ஒரு வேளை மருந்தாகும். சிறுவர்களுக்குப் பாதி அளவு, நாள் ஒன்றுக்கு மூன்று வேளைகள். கூடுமான வரையில் ஆகாரத்திற்கு முன்னதாக. 50 மாத்திரைகள் கொண்ட பாட்டில்கள் அழகான அட்டைப் பெட்டிகளில் கிடைக்கும்.

விலை ரூ. 3—0—0

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம் — மதராஸ்

Edited, Printed & Published by Dr. V. R. MURTY at the Homoeopathy Press Homeo House, Kumbakonam.